**TA6B** Register No. [ ]

(For the candidates admitted from 2017-2018 onwards)

# LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021

(Three-year Regular Course)

Third Year-Sixth Semester

## CRIMINOLOGY AND PENOLOGY

Time: 2½ hours — Maximum: 70 marks

### PART A – (2 x 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.**

1. Elucidate the contributions of Edwin. H. Sutherland for the development of criminology.
   குற்ற ஆய்வியலின் வளர்ச்சிக்கு எட்வின். ஹெச். சதர்லேண்ட் ஆற்றிய பங்களிப்புகளை இயம்புக.

2. Explain the prison system in India and compare it with the American and English prison systems.
   இந்திய சிறை அமைப்பு முறைகளை எடுத்துக் கூறி அதனை அமெரிக்கா மற்றும் ஆங்கில சிறை அமைப்புகளுடன் ஒப்பிடுக.

3. Explain 'victimless crime'. What are the remedies available to such victims under the Indian Legal System?
   குற்றப் பாதிப்பாளர் இல்லா குற்றங்களை விளக்குக. இந்திய சட்ட அமைப்பில் அத்தகைய குற்றப் பாதிப்பாளருக்கு கிடைக்கக் கூடிய தீர்வழிகள் என்ன?

### PART B – (2 x 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.**

4. Explain the role of probationary officer on release of an accused person on probation.
   குற்றம் சாட்டப்பட்டவரை நன்னடத்தையில் விடுவிக்கும் பொழுது நன்னடத்தை அலுவலரின் பங்கினை விளக்குக.

5. Explain the role of Broken Homes in the causation of Juvenile Delinquency.
   இளஞ்சிறார் குற்றம் நிகழ்வதற்கு சிதைந்த இல்லங்களின் பங்களிப்பை விவரிக்க.

6. Explain the psycho analytical approach on crime causation.
   குற்றத்திற்கான காரணத்தை விளக்கும் மனபகுப்பாய்வியல் வழிமுறையை விளக்குக.

### PART C – (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுது:

   (a) Hacking
   தகவல் திருட்டு

   (b) Brothel House
   விலைமாதர் இல்லம்

(c) Cartographic School
நில குற்றாய்வியலின் பயில் நெறியம்
(d) Black marketing
கள்ளச் சந்தை
(e) Statistics of crime
குற்றப் புள்ளி விவரங்கள்
(f) Freudian school of criminology
ப்ராய்டியன் குற்றாய்வியல் நெறியம்
(g) Wanchoo Committee Report
வான்கோ குழு அறிக்கை

## PART D – (2 x 6 =12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

8. Mr. A, was interviewed by a private Television channel about his involvement in a brutal murder case. He stated that he is getting pleasure while witnessing others in pain and sufferings. The Television channel sent a Report along with a recommendation to the Government to consider Mr. A as psychologically affected and to be treated rather than punished. Decide.

ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம், கொடூரமான கொலையில் தொடர்புடை திரு. அ. என்பவரை பேட்டி எடுக்கிறார்கள், அப்போது திரு. அ, தனது பதிலில் பிறர் படும் துன்பங்களையும் வலிகளையும் பார்க்கும் போது தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக கூறுகிறார். அந்த தொலைக்காட்சி நிறுவனம் தனது குறிப்பில், அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறது. அதாவது திரு. அ. என்பவர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட நபர் என்றும், அவரை தண்டிப்பதைக் காட்டிலும் குணப்படுத்துவதே சிறந்தது என்றும் கோருகின்றனர். இதனை முடிவு செய்க.

9. 'C', a diabetic patient went to 'B', a doctor for regular check-up. 'C' was diagnosed that the blood sugar level was lower than the minimum requirement. 'B' prescribed some medicines and the same was consumed by 'C'. C' died in the next morning. Whether the act of 'B' amounts to professional deviance and to be penalised being a white-collar crime? Give your reasons with relevant case laws.

'இ' என்ற ஓர் நீரழிவு நோயாளி, 'ஆ' என்ற மருத்துவரிடம் வழக்கமான பரிசோதனைக்காகச் செல்கிறார். 'இ' என்பவரின் இரத்தத்தின் சர்க்கரையளவு குறைந்தபட்ச அளவினைக் காட்டிலும் குறைவாக இருப்பதாகக் கண்டறியப்பட்டது. 'ஆ' சில மருந்துகளைப் பரிந்துரைக்கிறார், அதனை 'இ'-யும் உட்கொள்கிறார். அடுத்த நாள் காலையில் 'இ' இறந்து விடுகிறார். 'ஆ'-வின் செயல் தொழில்முறை விலகலுக்குச் சமமானதா மற்றும் செல்வாக்காளர் குற்றமாகக் கருதி தண்டிக்கத்தக்கதா? தகுந்த வழக்குகளுடன் உங்கள் காரணங்களைக் கூறவும்.

10. Jordan decides to steal some candies from the shop. He has money to purchase the candies, still he derives pleasure and steals the candies. Jordan was got caught red-handed while stealing. Discuss about the nature of the act and the appropriate punishment with the help of classical school of criminology.

ஜோர்டன் கடையிலிருந்து சில மிட்டாய்களைத் திருட முடிவு செய்கிறார். அவரிடம் மிட்டாய்களை வாங்க பணம் இருந்தது, இருப்பினும், திருடுவதால் அவருக்கு இன்பம் ஏற்படுவதால் அவர் மிட்டாய்களைத் திருடுகிறார். ஜோர்டன் திருடும்பொழுது கையும் களவுமாகப் பிடிபட்டுக் கொள்கிறார். குற்றாய்வியலின் பண்டைய கருத்தாய்வுக் குழாமின் உதவியுடன் ஜோர்டனின் செயலின் தன்மை மற்றும் பொருத்தமான தண்டனைப் பற்றி விவாதிக்கவும்.

---

**TA6A** Register No. [ ]

(For the candidates admitted from 2017-2018 onwards)

# LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021

(Three-year Regular Course)

Third Year / Sixth Semester

## HUMAN RIGHTS LAW

**Time: 2½ hours** **Maximum: 70 marks**

### PART A – (2 x 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Right to information is ensuring stronger and vibrant democratic process in India for citizens – Comment.
"இந்திய குடிமக்களின் ஜனநாயக செயல்முறைகளை வலிமையானதாகவும், துடிப்பானதாகவும் உறுதி செய்வது தகவல் பெறும் உரிமை என்பதாகும்" – விமர்சிக்கவும்.

2. Analyse the 'Freedom of Religion' as envisaged under the International Covenants.
சர்வதேச ஒப்பந்தங்களில் 'மதச் சுதந்திரத்தைப்' பற்றி கூறப்பட்டுள்ளதை ஆய்வு செய்க.

3. Enumerate the functions of the National Human Rights Commission constituted under the Protection of Human Rights Act, 1993. Explain the procedure followed by NHRC while inquiring into a complaints.
1993-ஆம் ஆண்டின், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பணிகளை வரிசைப்படுத்துக. புகார்கள் மீதான விசாரணை நடத்த தேசிய மனித உரிமைகள் ஆணையம் பின்பற்றும் நடைமுறைகளை விவரிக்கவும்.

### PART B – (2 x 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the legal status of Universal Declaration of Human Rights.
சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் சட்ட நிலையை விவாதி.

5. Discuss the contribution made by the Indian Judiciary towards upholding Human Rights.
மனித உரிமைகளை நிலை நாட்டுவதில் இந்திய நீதித்துறையின் பங்களிப்பினை விவாதிக்கவும்.

6. Discuss the implementation of economic, social and cultural rights by State parties.
பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளை செயல்படுத்த உறுப்பு நாடுகளின் முனைப்பை விவாதிக்க.

### PART C – (5 x 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following:**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக

(a) Human Rights Council
மனித உரிமை சபை

(b) Prisoners of War
போர் கைதிகள்

(c) Refugee Law
அகதிகள் சட்டம்

(d) Right of family
குடும்பத்திற்கான உரிமை

(e) Medical Research on human beings.
மனிதர்கள் மேலான மருத்துவ ஆய்வுகள்

(f) Right to contest election
தேர்தலில் போட்டியிட உரிமை

(g) International Labour Organisation.
சர்வதேச தொழிலாளர் அமைப்பு

**PART D – (2 x 6 =12 marks)**

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

8. A large number of Chakma migrants crossed over the borders of Bangladesh and entered into India. Most of them settled in Assam and Tripura but latter on they were moved to the State of Arunachal Pradesh. An agitation was launched by the All Arunachal Pradesh Students Union to expel them out of the state. The National Human Rights Commission approached the Supreme Court for appropriate directions. Decide.

வங்க தேசத்திலிருந்து புலன் பெயர்ந்த அதிக அளவிலான சக்மா இன மக்கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர். அவர்களில் அதிகமானோர் அசாம் மற்றும் திரிபுராவில் குடியேறினர் ஆனால் பின்னர் அவர்கள் அருணாச்சல பிரதேசத்திற்கு மாறினர். அனைத்து அருணாச்சல பிரதேச மாணவர் கூட்டமைப்பு அவர்களை தங்கள் மாநிலத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என கிளர்ச்சி செய்தனர். தேசிய மனித உரிமைகள் ஆணையம் தகுந்த வழிகாட்டுதல் கேட்டு உச்ச நீதிமன்றத்தை அணுகியது. தீர்மானிக்கவும்.

9. In order to control a riot, police started firing. A bullet pierced the car going on the road and entered into the body of the driver, who lost his life. State the human rights violated in this incident.

ஒரு கலவரத்தை கட்டுப்படுத்தும் எண்ணத்தில் காவல்துறை துப்பாக்கி சூடு நடத்தியது. அதில் ஒரு தோட்டா, சாலையில் சென்று கொண்டிருந்த காரை துளைத்து ஓட்டுநரின் உடலினுள் புகுந்ததால் ஓட்டுநர் இறந்துவிட்டார். இந்த சம்பவத்தில் மீறப்பட்டுள்ள மனித உரிமைகள் பற்றி கூறவும்.

10. When some children below the age of 14 were employed in a crackers industry at Sivakasi, a social activist filed a Public Interest Litigation demanding action against the crackers industry. Decide.

சிவகாசியில் அமைந்துள்ள பட்டாசு தொழிற்சாலையில் 14 வயதிற்கு கீழ் உள்ள சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இதை எதிர்த்து ஒரு சமூக ஆர்வலர் பட்டாசுதொழிற்சாலை மீது நடவடிக்கை எடுக்கக்கோரி பொது நல வழக்கு ஒன்றைத் தொடுத்தார். முடிவு செய்க.

---

TA6C

Register No.

(For the candidates admitted during 2017-2018 onwards)

## LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021.

(Three-year Regular Course)

Third Year-Sixth Semester

## INTELLECTUAL PROPERTY LAW

Time: 2½ hours Maximum: 70 marks

### PART A – (2 x 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

1. Define "Patents", Explain in detail about the Non-Patentable Inventions.
   "காப்புரிமைகள்" என்பதை வரையறை செய்க, காப்புரிமை பெற இயலாத கண்டுபிடிப்புகள் பற்றி விரிவாக விளக்குக.

2. Discuss the Role and functions of WTO.
   உலக வர்த்தக மையத்தின் பங்கு மற்றும் செயல்பாடு பற்றி விளக்குக.

3. Define "Copy Right", Discuss the rights and duties of the Author under Copy Right Act, 1957.
   பதிப்புரிமை என்பதை வரையறை செய்து ஒரு பதிப்பாசிரியரின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி விளக்குக.

### PART B – (2 x 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

**பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

4. Define "collective Trademark", Explain about the rights arising out of registration Trade Mark
   "கூட்டு வணிக முத்திரை" என்பதை வரையறை செய்க; வணிக முத்திரை பதிவு செய்வதால் எழும் உரிமைகள் பற்றி விளக்குக.

5. What is "Trade Secrets", what are remedies available in case of Infringement of Trade Secrets.
   வணிக இரகசியம் என்றால் என்ன? வணிக இரகசிய உரிமை மீறலுக்கு உண்டான தீர்வழிகள் என்ன.

6. What are the effects of TRIPS Agreement on Patents Law and Copy Rights Law.
   காப்புரிமை சட்டம் மற்றும் பதிப்புரிமை சட்டத்தின் மீது டிரிப்ஸ் உடன்படிக்கையின் தாக்கம் யாவை?

### PART C – (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

   (a) WTO
   உலக வர்த்தக மையம்

(b) Passing off
வணிக போலி

(c) Deceptive Similarity
ஒத்த தன்மையுடையவை

(d) Confidential Information
இரகசியத் தகவல்

(e) Compulsory license under Patent Act
காப்புரிமை சட்டத்தின் கீழான கட்டாய உரிமம்

(f) Patent Agent
காப்புரிமை முகவர்

(g) Term of Copy Right
பதிப்புரிமை காலம்

**PART D – (2 x6 =12 marks)**

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

**பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டிற்கு தகுந்த சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

8. Mr. Gopal, a proprietor publishes a monthly magazine. Harish is his employee who writes article to a particular column in the magazine every month. After retirement, Mr. Harish wants to publish all his articles in the form of a book without permission of Mr. Gopal. But, Mr. Gopal objected by claiming that Harish is not entitled to do so. Decide.

திரு கோபால் என்பவர் மாத பத்திரிக்கை பதிப்பகத்தின் உரிமையாளர். ஹரிஸ் என்பவர் அவரிடம் பணியாற்றும் பணியாளர். அவர் கோபாலின் மாத பத்திரிக்கையில் கட்டுரையினை தொடர்ச்சியாக மாதம்தோறும் எழுதி வந்தார். ஹரிஸ், தனது பணி ஓய்விற்கு பிறகு அவரது அனைத்து கட்டுரைகளையும் கோபாலின் அனுமதியின்றி புத்தகமாக பிரசுரிக்க விரும்புகின்றார். அதற்கு கோபால், ஹரிஸ் அவ்வாறு செய்ய இயலாது என மறுப்பு தெரிவிக்கின்றார். முடிவு செய்க.

9. 'A' the plaintiff company had been manufacturing medicine under the trademark of "Nibarah". After a lone time 'B' the defendant began to manufacture disinfectant under the same trademark of "Nibarah". The plaintiff Company raised objection. Decide.

'அ' என்னும் வாதி நிறுவனம் "நிபாரா" என்னும் வர்த்தக குறியீட்டின் கீழ் மருந்துகள் தயாரித்து வருகின்றது. நீண்ட காலத்திற்க்கு பிறகு 'ஆ' என்னும் நிறுவனம் "நிபாரா" என்னும் வர்த்தக குறியீட்டின் கீழ் கிருமி நாசினி தயாரிப்பு செய்கின்றது. இதை 'அ' என்னும் நிறுவனம் எதிர்க்கின்றது. முடிவு செய்க.

10. Dr. Barathi, an orthopaedic Surgeon invents new process of surgery of limbs wants to claim patent for his method and approaches for obtaining patent. Give advice to Dr. Barathi.

Dr. பாரதி என்னும் ஒரு முடநீக்கியல் அறுவை சிகிச்சை மருத்துவர் மூட்டு அறுவை சிகிச்சைக்கான புதிய முறையினை கண்டுபிடித்து அதற்காக காப்புரிமை பெற விழைகிறார். காப்புரிமை பெற மருத்துவர் பாரதிக்காக அறிவுரை வழங்கவும்.

---